LIBRARY
10 JU
EASTERN UNIVE

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – I
2009/2010 (ஜனவரி/ பெப்பிரவரி 2013)

TLS 2103 தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினா உள்ளிட்டு நான்கு வினாக்களுக்கு விடை தருக

1. பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்களுக்கான பொருளை உரையாசிரியர்களின் துணை கொண்டு விளக்குக.

   (அ) நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
   கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்

   (ஆ) அவைதாம்
   மெய் பிறிதாதல் மிகுதல் குன்றலென்று
   இவ்வென மொழிப திரியுமாறே

   (இ) பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
   நினையுங் காலை அம்மொடு சிவணும்
   ஐயென் இறுதி அரை வரைந்து கெடுமே
   மெய்யவண் ஒழிய என்மனார் புலவர்

   (ஈ) தேன் என்கிளவி வல்லெழுத்தியையின்
   மேல்நிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
   ஆமுறை இரண்டும் உரிமையுமுடைத்தே
   வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை

   (உ) யகரம் வருவழி இகரம் குறுகும்
   உகரக் கிளவி துவரத் தோன்றாது

(5 X 5 = 25 புள்ளிகள்)

2. தமிழ் எழுத்துக்களின் பிறப்புத் தொடர்பாக 'பிறப்பியலில்' தொல்காப்பியர் கூறுவனவற்றை ஆராய்க.

(25 புள்ளிகள்)

3. (அ) தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் குறித்து தொல்காப்பியர் யாது கூறுகின்றார்?

(15 ள்ளிகள்)

   (ஆ) அவற்றின் தற்காலப் பொருத்தப்பாட்டினைப் பரிசீலிக்குக.

(10 புள்ளிகள்)

4. தொல்காப்பியம் 'உருபியலில்' வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களோடு சேரும் முறைமை விளக்கப்படுமாற்றைத் தெரிவுறுத்துக.

( 25 புள்ளிகள்)

5. (அ) உயிரீற்றுப் புணர்ச்சி குறித்து தொல்காப்பியர் கூறுவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) அதன் தற்காலப் பொருத்தப்பாடு குறித்துக் கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) தமிழ் எழுத்துக்களின் வரி வடிவம்

(ஆ) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

(இ) மகர ஈற்றுப் புணர்ச்சி

(ஈ) தமிழில் இறுதி நிலை எழுத்துக்கள்

(12 ½ X 2 = 25 புள்ளிகள்)